## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## பதினோராம் பத்து

## ஐந்தாம் திருமொழி - மானமரும்
## இரண்டு தோழியர் எம்பெருமானது ஸௌலப்யத்தையும்
## பரத்வத்தையும் எதிர் எதிராகக் கூறுதல்

** மான் அமரு மென்னோக்கி * வைதேவி இன் துணையா *
கான் அமரும் கல் அதர் போய்க் * காடுறைந்தான் காண் ஏடீ! **
கான் அமரும் கல் அதர் போய்க் * காடுறைந்த பொன் அடிக்கள் *
வானவர் தம் சென்னி * மலர் கண்டாய் சாழலே! 1

தந்தை தளை கழலத் * தோன்றிப் போய் * ஆய்ப்பாடி
நந்தன் குல மதலையாய் * வளர்ந்தான் காண் ஏடீ! **
நந்தன் குல மதலையாய் வளர்ந்தான் * நான்முகற்குத்
தந்தை காண் * எந்தை பெருமான் காண் சாழலே! 2

ஆழ் கடல் சூழ் வையகத்தார் * ஏசப் போய் * ஆய்ப்பாடித்
தாழ் குழலார் வைத்த * தயிர் உண்டான் காண் ஏடீ! **
தாழ் குழலார் வைத்த * தயிர் உண்ட பொன் வயிறு * இவ்
வேழ் உலகும் உண்டும் * இடம் உடைத்தால் சாழலே! 3

அறியாதார்க்கு * ஆனாயன் ஆகிப் போய் * ஆய்ப்பாடி
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்தான் காண் ஏடீ! **
உறி ஆர் நறுவெண்ணெய் * உண்டுகந்த பொன் வயிற்றுக்கு *
எறி நீர் உலகனைத்தும் * எய்தாதால் சாழலே! 4

வண்ணக் கருங்குழல் * ஆய்ச்சியால் மொத்துண்டு *
கண்ணிக் குறுங்கயிற்றால் * கட்டுண்டான் காண் ஏடீ! **
கண்ணிக் குறுங்கயிற்றால் * கட்டுண்டான் ஆகிலும் *
எண்ணற்கு அரியன் * இமையோர்க்கும் சாழலே! 5

கன்றப் பறை கறங்கக் * கண்டவர் தம் கண் களிப்ப *
மன்றில் மரக்கால் * கூத்தாடினான் காண் ஏடீ! **
மன்றில் மரக்கால் * கூத்தாடினான் ஆகிலும் *
என்றும் அரியன் * இமையோர்க்கும் சாழலே! 6

கோதை வேல் ஐவர்க்காய் * மண் அகலம் கூறிடுவான் *
தூதனாய் மன்னவனால் * சொல் உண்டான் காண் ஏடீ! **
தூதனாய் மன்னவனால் * சொல் உண்டான் ஆகிலும் *
ஓத நீர் வையகம் * முன் உண்டு உமிழ்ந்தான் சாழலே! 7

பார் மன்னர் மங்கப் * படை தொட்டு வெஞ்சமத்து *
தேர் மன்னர்க்காய் * அன்று தேர் ஊர்ந்தான் காண் ஏடீ! **
தேர் மன்னர்க்காய் * அன்று தேர் ஊர்ந்தான் ஆகிலும் *
தார் மன்னர் தங்கள் * தலை மேலான் சாழலே! 8

கண்டார் இரங்கக் * கழியக் குறள் உருவாய் *
வண்தாரான் வேள்வியில் * மண் இரந்தான் காண் ஏடீ! **
வண்தாரான் வேள்வியில் * மண் இரந்தான் ஆகிலும் *
விண்டேழ் உலகுக்கும் * மிக்கான் காண் சாழலே! 9

** கள்ளத்தால் மாவலியை * மூவடி மண் கொண்டளந்தான் *
வெள்ளத்தான் வேங்கடத்தான் * என்பரால் காண் ஏடீ! **
வெள்ளத்தான் * வேங்கடத்தானேலும் * கலிகன்றி
உள்ளத்தின் உள்ளே * உளன் கண்டாய் சாழலே! 10

**அடிவரவு:** மானமரும் தந்தை ஆழ்கடல் அறியாதார்க்கு வண்ணம் கன்ற கோதை பார்மன்னர் கண்டார் கள்ளத்தால் மைந்நின்ற

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---